# இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியக அனுசரணையில் 2ஆவது Sri Lanka IRONMAN 70.3

உலகளாவிய பிரபலமான IRONMAN விளையாட்டு நிகழ்வு இலங்கையில் இரண்டாவது தடவையாகவும் இடம்பெறவுள்ளதுடன், சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கு மிகவும் சிறந்த ஒரு நாடாக இலங்கையை நிலைநிறுத்தவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதியன்று கொழும்பு,காலி முகத்திடலில் இடம்பெறவுள்ள So Sri Lanka IRONMAN 70.3 விளையாட்டு நிகழ்வின் பிரதான அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம் முன்வந்துள்ளது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் ProAm Serendib இனால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பல்வேறு அரச மற்றும் தனியார் துறை ஸ்தாபனங்களும் இதற்கு ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம் So Sri Lanka IRONMAN 70.3 Colombo நிகழ்வை இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடுசெய்துள்ளதுடன், இந்நிகழ்வில் 56 நாடுகளிலிருந்து 700 இற்கும் மேற்பட்ட தடகளவீரர்கள் பங்குபற்றவுள்ளனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற முதலாவது IRONMAN 70.3 நிகழ்வில், 60 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 650 இற்கும் மேற்பட்ட தடகள வீரர்கள் பங்குபற்றி, மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. விளையாட்டு சுற்றுலாத் துறைக்கு மிகவும் உகந்த ஒரு நாடாக இலங்கை திகழ்கின்றது என்பதை இந்நிகழ்வு வெளிக்கொண்டுவந்ததுடன், நாட்டிற்கு நல்லபெயரை சம்பாதிக்கவும் வழிகோலியது.

சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய




அலுவல்கள் அமைச்சரான ஜோன் அமரதுங்க இந்த ஆண்டு நிகழ்வு தொடர்பில் கருத்துவெளியிடுகையில், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் IRONMAN 70.3 நிகழ்வு இலங்கையில் இடம்பெறுவதைக் காண்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சி நிரலில் இது ஒரு நிரந்தர நிகழ்வாக தற்போது மாற்றம் கண்டுள்ளது என நான் நம்புகின்றேன். கடந்த ஆண்டு இந்நிகழ்வுக்கு கிடைக்கப்பெற்ற வெற்றியைக் கருதுகையில், இந்த ஆண்டு நிகழ்வில் இன்னும் அதிகமானளவில் தடகளவீரர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொள்வர் என நான் உறுதியாக நம்புகின்றேன். உலகத்தரம் வாய்ந்த நிகழ்வுகளை நடாத்துவதற்கு இலங்கை தயாராக உள்ளது என்பதை நிரூபித்துள்ள, சர்வதேச அளவில் பிரபல்யம் வாய்ந்த இந்நிகழ்வுடன் இணைந்துள்ளமையை முன்னிட்டு இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம் பெருமை கொள்கின்றது. இந்த பிரமாண்டமான நிகழ்வை வெற்றிகரமாகத்தயார்செய்ய முடிந்துள்ளமையானது தனியார் மற்றும் அரசதுறைகள் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வழிமுறையொன்றாக இணைந்து நட்பாகச் செயற்பட முடியும் என்பதை நமக்கு காண்பிக்கின்றது.

ஒன்றாக்கத்துடன் ஓட்ட நிகழ்வு ஆரம்பிப்பதுடன், 1.9 கிமீ நீச்சல் போட்டியானது காலிமுகத்திடலை அண்டிய கடற்கரையில் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து சாலைகளில், வேகமான 90 கிமீ சைக்கிள் ஓட்டம் இடம்பெறவுள்ளதுடன், நாட்டின் அழகிய காட்சிகளை ரசித்தவாறே 21.1 கிமீ தூரத்தைக் கடந்து, காலிமுகத்திடலின் முகப்பில் நிறைவடையவுள்ளது.